தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2018

ஆண்டு: 10 திகதி: 23.06.2018

## நேரம்: 2:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி.புவனேஸ்வரி புருஷோத்தமர்

மாணவர் பெயர்: ________________________________

| வினாக்கள் | புள்ளிகள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 30 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 10 | |

வினா: 1

**கீழேயுள்ள பந்தியை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எடுதுக.**

**(புன்னிகன்)**

பிரபல எழுத்தாளரும், நாவலாசிரியரும், சினிமா வசனகர்த்தாவுமான பாலகுமாரன் 15.05.2018 இல் காலமானது நாம் அனைவரும் அறிந்ததே. இவர் 200க்கு மேற்பட்ட நெடுங்கதைகளையும், 100க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் ஏராளமான கட்டுரைகளையும் தந்திருக்கிறார். இவரது மெர்க்குரிப்பூக்கள், இரும்புக்குதிரை தாயுமானவன், கரையோர முதலைகள், ஆனந்தவயல், உள்ளம் கவர் கள்வன், பயணிகள் கவனிக்கவும் ஆகிய நாவல்கள் புகழ்பெற்றவை. உடையார் தொடர்கதை மிகவும் பெருமை கொண்டது.

தமிழ் எழுத்தாளர் ஒருவர் தன்எழுத்தின் மீதுள்ள நம்பிக்கையை மட்டும் வைத்துச் சக்கரவர்த்தி போல வாழமுடியும் என நிரூபித்த அண்மைக்கால உதாரணமனிதர் பாலகுமாரன். அவர் எழுத்தால் ஆட்சி செய்த எழுத்தாளர்.

பாலகுமாரன் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்காட்டுப் பள்ளி அருகேயுள்ள பழமார்நேரி என்ற ஊரில் 05.07.1946 இல் பிறந்தார். தனது உயர்கல்வியை முடித்து தட்டச்சாளராகப் பணியாற்றிய பின்பு 1969ஆம் ஆண்டளவில் சிறுகதை எழுத்துலகில் தன்னை இணைத்துக் கொண்டார். இவரது புத்தகங்களின் விற்பனை சந்தையில் சூடான சுவையான கேக் விற்பனை போன்று மதிக்கப்பட்டது.

ஆனந்தவிகடனில் பாலகுமாரன் எழுதி வெளிவந்த முதல்கதை "தாயுமானவன்" ஆகும். கடைசியாக இவ்வருடம் ஆனந்த விகடனில் அவர் அளித்த பேட்டியில் "ஒரே நேரத்தில் ஏழு தொடர் கதைகள் எழுதினேன். வாசகர்களும் அப்போது இருந்தார்கள். தொடர்கதை படித்த வாசகர்கள் எல்லாம் இப்ப சீரியல் பார்க்க ஆரம்பித்து விட்டாரகள்" என்றார். அத்துடன் "பழையமாதிரி ஒரே நேரத்தில் பல தொடர்கள் எழுதமுடியாவிட்டாலும் எழுதாமல் என்னால் ஒருபோதும் இருக்க முடியாது. இப்பவும் எழுதுகிறேன். எழுதலன்னா, எழுதமுடியலன்னா செத்துப் போயிடுவேன்" என்று கூறினார்.

தமிழின் முன்னணி இதழ்களான கல்கி, குமுதம், ஆனந்தவிகடன் ஆகிய சஞ்சிகைகளில் ஒரே நேரத்தில் எழுதி எல்லா வாசகர்களையும் தன் எழுத்தை நேசிக்க வைத்தார். ஒரு கட்டத்தில் வரலாற்று ஆர்வம் தொற்றிக்கொள்ள சோழர்களை ஆராதிக்கத் தொடங்கினார். இராஜேந்திரசோழன் அவருக்கு மிகவும் பிடித்த கதாநாயகன். "உடையார்" சரித்திரநாவல் இப்போதும் புத்தகக் கண்காட்சிகளில் பரபரப்பாக விற்கப்படுவது அவரது ஆளுமையை உணர்த்துகிறது.

"உடையார்" தொடர்நவீனம் 2650 பக்கங்களையும், நான்கு பாகங்களையும் கொண்டது. ராஜராஜசோழனின் பல்வேறுபட்ட சிறப்புக்களையும் தஞ்சைப் பெருங்கோயிலின் மேன்மையையும் இது எடுத்து விளம்பியது. "கங்கை கொண்ட சோழன்" 2306 பக்கங்களைக் கொண்டதாக எழுதியுள்ளார்.

பாலகுமாரின் திரைவசனத்திறன் சினிமாத்துறைக்குப் பெரும் பொக்கிஷம் என்பர். கமலஹாசனின் நாயகன், குணா, ரஜனியின் பாட்ஷா டைரக்டர் ஷங்கரன்

ஜென்ரில்மேன், காதலன், ஜீன்ஸ் உட்பட 23 படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதியுள்ளார்.

திரைப்பட இயக்குநர் பாலச்சந்தரின் சிந்துபைரவி, புன்னகை மன்னன், சுந்தர சொப்பன கலு (தெலுங்கு) படங்களிலும், கே.பாக்கியராஜுடன் இணைந்து சில படங்களிலும் உதவி இயக்குனராகப் பணிபுரிந்தார். 1988இல் "இது நம்ம ஆளு" என்ற கே.பாக்கியாஜ் கதாநாயகனாக நடித்த படத்தை இவரே இயக்கினார்.

தமிழ்நாட்டு அரசின் கலைமாமணி விருதும், சித்தாந்தச் செம்மல் ஆன்மீக எழுத்துலக வித்தகர் என்ற விருதுகளும் அளித்துக் கௌரவிக்கப்பட்டார். இவரது "இரும்புக்குதிரை" நாவலுக்கு ராஜா சேர்.அண்ணாமலைச் செட்டியார் விருதும், மெர்க்குரிப்பூக்களுக்கு இலக்கிய சிந்தனைவிருதும், சுகஜீவனம் நாவலுக்குத் தமிழ்நாட்டு அரசின் முதற்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1. பாலகுமாரன் என்பவர் யார்? (2 புள்ளிகள்)

______________________________

______________________________

2. இவர் எவ்வளவு தொகையான நூல்களை எழுதியுள்ளார்? (3 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

3. பாலகுமாரன் முதலில் வகித்த பதவி (முதல் வேலை) என்ன? (1 புள்ளி)

______________________________

4. எந்த ஆண்டில் எழுத்துலகில் இணைந்தார்? (1 புள்ளி)

______________________________

5. இவரது புத்தக விற்பனைக்கு உவமையாகக் கூறப்பட்டது என்ன? (1 புள்ளி)

______________________________

______________________________

6. ஆனந்த விகடன் பேட்டியில் பாலகுமாரன் என்ன கூறினார்? (4 புள்ளிகள்)

______________________________

______________________________

7. பாலகுமாரனது எழுத்துக்கள் வெளிவந்த முன்னணி இதழ்கள் எவை? (1 புள்ளி)

8. உடையார் தொடர் நவீனத்தின் சிறப்பு பற்றி என்ன கூறுவீர்? (2 புள்ளிகள்)

9. பின்வரும் அட்டவணையை நிரப்புக? (5 புள்ளிகள்)

| பாலகுமாரன் வகித்த பதவி | நடிகர்கள் | இயக்குநர்கள் | படங்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| திரைக்கதை வசனகர்த்தா | | | |
| | | | |
| | | | |
| உதவி இயக்குநர் | | | |
| இயக்குநர் | | | |

10. இவர் பெற்ற விருதுகள் எவை? (4 புள்ளிகள்)

11. பாலகுமாரனைப் பற்றிய உமது அபிப்பிராயத்தை எழுதுக. (உமது மனதில் உண்டான உணர்வுகள், பிரமிப்பு, தமிழ்ப்பணி அவரது சிந்தனை பற்றிய கருத்துகளை எழுதுக) (6 புள்ளிகள்)

வினா 2

**கீழேயுள்ள கவிதையை வாசித்துக் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

(10 புள்ளிகள்)

பள்ளி செல்லும் பிள்ளையே பாடம் ஒன்று கற்றுக் கொள்!
நல்ல சாலை விதிகளை நன்கு மனதுள் வைத்துக் கொள்!

நடக்கும் பாதை வழியிலே நாளும் நீயும் நடக்கணும்!
கடக்கும் இடத்தில் கவனமாய் கடந்து போகத் தெரியணும்!

சிரித்துப் பேசி மகிழ்ச்சியாய் சேர்ந்து நால்வர் சாலையை
மறித்துச் செல்லல் நல்லதோ மனத்தில் எண்ணிப் பாருங்கள்!

வளைவில் பிறரை முந்தினால் வந்துநிற்கும் விபத்துமே
அளவிலாத வேகத்தால் ஆபத்துண்டு தெரிந்து கொள்!

பாதையில் பந்து பம்பரம் பட்டம் போன்ற விளையாட்டு
வேதனை தருமே யாருக்கும் வேண்டாம் இவற்றைத் தவிர்த்திடு!

1. இங்கு சொல்லப்பட்ட பாடம் என்ன? (2 புள்ளிகள்)

___

___

2. சாலையில் செல்லும் போது எப்படிச் செல்ல வேண்டுமென்று கவிஞர் கூறுகிறார்? (4 புள்ளிகள்)

___

___

3. வீதியில் எதனால் ஆபத்துக்கள் வருகிறதென்று கண்டீர்? (4 புள்ளிகள்)

___

___

___

**வினா 3**

**கடிதம் எழுதுதல்.** (15 புள்ளிகள்)

உமது சகோதரி / சகோதரனின் 21வது பிறந்ததினக் கொண்டாட்டத்திற்கு வரும்படி கேட்டு மெல்போனில் வசிக்கும் உமது தாத்தா, பாட்டிக்குக் கடிதம் எழுதுக.

(100 சொற்களுக்கு அமைவாக எழுதுக)

வினா 4

**கட்டுரை எழுதுதல்.** (20 புள்ளிகள்)

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து 150 – 175 சொற்களுக்கு அமைவாக எழுதுக.

1. சூழல் மாசடையாது பாதுபாப்பது முக்கியமாக உள்ளது. “சூழலைப் பேணுவோம்” என்ற தலைப்பில் உமது பாடசாலையில் நீர் ஆற்றவுள்ள பேச்சை (உரையை) எழுதுக.
2. “தமிழின் பெருமை” என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.
3. உயர்தரச் சான்றிதழ் பரீட்சைக்குத் தமிழை ஒருபாடமாக எடுப்பது நன்மை தரும் என்பதை விளக்கி மாணவர்களையும, பெற்றோர்களையும் கவரத்தக்க வகையில் சஞ்சிகை ஒன்றில் வெளியிடக் கட்டுரை எழுதுக.

**கேட்டுக் கிரகித்தல்**

வினா 5 (15 புள்ளிகள்)

4. மகளை என்ன பாடங்கள் படிக்கும்படி தந்தை கூறுகின்றார்? (2 புள்ளிகள்)

5. அ) மகளுக்கு விருப்பமில்லாத படிப்புகள் எவை? (1 புள்ளி)

ஆ) மகளுக்கு விருப்பமான படிப்புகள் எவை? (1 புள்ளி)

6. தாய் ஏன் மருத்துவப் படிப்பு படிக்கும்படி கேட்டார்? (2 புள்ளிகள்)

7. மகளுக்கு உயிர்மூச்சாக இருப்பது எது? அதனை அவர் எப்படிக் கற்பதாகக் கூறுகின்றார்? (2 புள்ளிகள்)

8. மகளுக்குத் தந்தை என்ன பாடத்தைக் கற்பித்தார்? (2 புள்ளி)

மகளுக்குத் தாய் என்ன பாடத்தைக் கற்பித்தார்?

9. மகள் இறுதியாகக் கூறிய அவரது எதிர்காலத் திட்டம் என்ன? (3 புள்ளிகள்)

10. தமிழ்ப் பெற்றோரினதும் தமிழ்ச் சமூகத்தினதும் கருத்து என இப்பந்தி மூலம் என்ன அறிந்தீர்? (2 புள்ளிகள்)

(10 புள்ளிகள்)

**வினா 6**

1. நீர் கேட்ட இந்த உரையாடல் எங்கு நடைபெற்றது? (1 புள்ளி)

______________________________

______________________________

2. வாடிக்கையாளரான பெண் கடை நடத்துநரிடம் என்ன பொருளைப்பற்றி முதலில் வினாவுகிறார்? (1 புள்ளி)

______________________________

______________________________

3. அந்தப் பொருள் எங்கே இருக்கிறதென்று கடைக்காரர் கூறிய பதில் என்ன? (3 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

______________________________

4. அந்தப் பெண் மொத்தமாக செலுத்த வேண்டிய பணத்தொகை எவ்வளவு? (1 புள்ளி)

______________________________

______________________________

5. கடைக்காரர் எவ்வளவு பணம் கேட்கிறார்? (1 புள்ளி)

______________________________

______________________________

6. கடை நடத்துநர் வாடிக்கையாளர்களுடன் நல்ல முறையில் நடக்கிறார் என்பதை எப்படிக் காண்கிறீர்? (3 புள்ளிகள்)

______________________________

______________________________